## தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் - 2016

---

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலமைக் கூற்று மற்றும அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் ஒரு விபரமான அறிக்கை 2017 யூலை 04 இல் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகத்தின் தாபிப்பு**

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனமானது அரச பொறியியல் கூட்டுத்தாபனம் மற்றும் கட்டிட திணைக்களத்தின் நில ஆராய்ச்சி ஆய்வுகூடம் போன்றவற்றின் நிறுவனங்களுடன் நிலையான செயற்பாடுகளை செயற்படுத்துவதற்கு தனியான நிறுவனமொன்று தாபிப்பதற்கு 1993 செப்தெம்பர் 29 இல் 93/340/173 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம், அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் தாபிக்கப்பட்டிருந்தது. நிறுவனமானது பாரளுமன்ற அதிகாரச் சட்டத்தின் ஒன்றிணைக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, நிறுவனத்தால் வழங்கப்பட்ட சான்றிதழின் தகுதி ஐயத்திற்கிடமாக இருந்தது. மேலும், ஆபத்தான பகுதிகளில் செய்யப்பட்ட நிர்மாணங்களில் ஈடுபட்ட நபர்களிற்கு எதிராக நிறுவனத்தால் எடுக்கப்பட வேண்டிய தொடர்நடவடிக்கைகளின் சந்தர்ப்பங்கள் வரையறுக்கப்பட்டிருந்தது.

1.5. **முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1. **இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம்- 07 இன் 86 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு, ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் வகுதி தொடர்பான விடயங்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான ரூபா 21,000,000 தொகையான வருமான வரி ஏற்பாடு புறம்பாக காட்டுவதற்குப் பதிலாக நிதிக் கிரயமாக நிதிக்கூற்றில் காடடப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வுக் கட்டணங்களிற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.3. கிடைக்கவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 முதல் 2016 வரை மண்சரிவு ஆபத்து மதிப்பீட்டில் வழங்கப்பட்ட அறிக்கையில் 05 பிரதேச சபைகளிலிருந்து நிறுவனத்திற்கு ரூபா 630,082 கூட்டு மொத்தத் தொகை கிடைக்க வேண்டியாக இருந்தது. அதில், ரூபா 478,690 ஆன தொகை பல ஆண்டுகளாக நிலுவையாக இருக்கின்றதுடன் உரிய காலத்தில் பெறவேண்டியவையை அறவிடுவதற்கு நிறுவனத்தால் முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 585,727 கூட்டு மொத்தத் தொகையான கேள்வி வைப்புகள் மற்றும் கேள்வி உத்தரவாத வைப்புகள் என்பவற்றின் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதில் ரூபா 414,160 கூட்டு மொத்தத் தொகையான மீதிகள் 2 ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக இருந்தது.

(இ) நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து அபறவேண்டியவையாக 2009 இலிருந்து நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,919,636 தொகையான மீதிகள் தொடர்ச்சியாக காட்டப்பட்டிருந்த போதிலும், அதிகாரசபையின் நிதிக்கூற்றில் அத்தகைய மீதி செலுத்த வேண்டியவையாக காட்டப்பட்டிருக்கவில்லை. ஆதலால், உரிய மீதியின் அறவீட்டுத் தன்மை ஐயத்திற்கிடமாக இருந்தது என சான்றுபடுத்தியது.

(ஈ) 2012 இலிருந்து நிதிக்கூற்றில் கடன்பட்டோரின் கீழ் காட்டப்பட்ட ரூபா 2,495,265 தொகையான மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி சேர் வரிக் கட்டுப்பாட்டுக் கணக்கில் இருந்த ரூபா 3,803,935 கூட்டுத் தொகையான வரவு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களிற்கான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் நிதிப்பிரமாணம் 835(2)(ஈ) | பாமண்கடை பகுதியில் குத்தகை அடிப்படையில் ஆராய்ச்சி நிறுவனத்தால் மீளாய்வாண்டின் போது அலுவலக கட்டிடமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றின் மீதான மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட நிதி எல்லைகளை விஞ்சுகின்ற எந்தவொரு சந்தர்ப்பங்களிலும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டுமென வேண்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் வேண்டப்பட்ட அங்கீகாரம் பெறப்படாமல் 05 சந்தர்ப்பங்களில் முற்பணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான ஆராய்ச்சி நிறுவனத்தின் தொழிற்பாட்டு விளைவுகள் ரூபா 47,920,494 ஆன மிகையாக இருந்ததுடன் நோரொத்த முன்னைய ஆண்டிலுள்ள மிகைகள் ரூபா 53,547,989 ஆனதால், நிதிசார் விளைவுகளில் ரூபா 5,627,495 தொகையான வீழ்ச்சியாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மேற்குறிப்பிட்ட தொழிற்பாட்டு விளைவுகளின் வீழ்ச்சிக்கு ரூபா 8,559,890 ஆல் ஆலோசனை கட்டண வருமானத்தின் குறைவு காரணமாக இருந்தது. மண்சரிவு ஆராய்ச்சி மற்றும் ஆபத்து முகாமைத்துவப் பிரிவு மனித தீர்வு திட்டமிடல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு என்பவற்றின் வருமானம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது முறையே 83 சதவீதம் மற்றும் 159 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அதேநேரம், சுற்றாடல் கற்கைகள் மற்றும் செவைகள் பிரிவு, புவிச்சரித்திர பொறியியல் மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு மற்றும் கட்டிட பொருட்கள் பரீட்சிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவு என்பன முறையே 12 சதவீதம், 60 சதவீதம் மற்றும் 62 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை மீளாய்வு செய்கையில் 2012 முதல் 2016 வரையான காலத்தின் போது மிகைகள் அறிக்கையிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2012 இல் ஏற்பட்ட ரூபா 129,665,502 தொகையான மிகைகள் வேதனக் கிரயம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத் தேய்வு என்பவற்றினை சீராக்கிய பின்னர் 2016 இல் ரூபா 335,372,999 வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

## 4.. தொழிற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1. மண்சரிவு ஆபத்துக்களில் காப்புறுதி மதிப்பீட்டுச் சான்றிதழ்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மண்சரிவுகளில் தன்னார்வ பகுதிகளின் நிர்மாண வேலைகளில் மண்சரிவு ஆபத்துக்களில் மதிப்பீட்டு சான்றிதழ்களின் வழங்கல் 10 மாவட்டங்களில் அமைந்துள்ள ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் 09 உப அலுவலகங்களின் பிரதான செயற்பாடுகளில் ஒன்றாக உள்ளது. மண்சரிவு ஆபத்தினை இனங்காண்பதற்கு பிரதேச செயலகங்களால் செய்யப்பட்ட நேரடி வேண்டுகைகளில் இலவசமாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. எவ்வாறாயினும், தனியார் தரப்பினர் மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் செய்யப்பட்ட வேண்டுகைகளில் கட்டணங்களுடன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பதுளை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகங்களால் சான்றிதழ் வழங்கலில் தெரிவுச் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் அவற்றில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சான்றிதழ் வழங்குகையில் களப் பரிசோதனையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தரால் பேணப்பட்ட பதிவேடுகள் மற்றும் சான்றிதழ்கள் போன்றவற்றிற்காக வழங்கப்பட்ட விண்ணப்பங்களில் துணைநிலை உத்தியோகத்தரால் வழங்கப்பட வேண்டிய தகவல்கள் என்பன கிடைக்காமையால் கணக்காய்வில் புலனாய்வு தன்மை மற்றும் அவற்றின் மீது பொறுப்புடைய உத்தியோகத்தர் என்பவற்றினை அனுமதிக்கப்பட

முடியவில்லை. மேலும், பதுளை மாவட்ட பிராந்திய அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட தொழிலாளர் சட்டவிரோதமான முறையில் ஆய்வுகூட பரிசோதனை மேற்கொண்டிருந்ததுடன் அவற்றின் மீது அறிக்கையும் வழங்கியிருந்தார் எனவும் வெளிப்பட்டது. ஆதலால், ஆராய்ச்சி நிறுவனம் வழங்கப்பட்ட அறிக்கையின் தகுதிபற்றி கருத்துதெரிவித்திருக்கவில்லை என சான்றுபடுத்தப்பட்டது.

(ii) பதுளை பாவட்டத்தில் பிராந்திய அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையில் விண்ணப்பம் பெறப்பட்ட திகதியிலிருந்து 02 மாதங்களிற்கு மேலான தாமதத்துடன் 15 சந்தர்ப்பங்களில் சான்றிதங்கள் வழங்கப்பட்டது என வெளிப்பட்டது. சான்றிதழ்கள் வழங்குவதற்கு தேவைப்பட்டிருந்த மேலதிக தகவல்களை வழங்குவதற்கு விண்ணப்பதாரிகளால் எடுக்கப்பட்ட காலம் குறிப்பிடத்தக்களவு தாமதங்களுடன் உரய சான்றிதழ்கள் வழங்கவேண்டி இருந்தது என பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்தார்.

(iii) மண்சரிவு ஆபத்தினைக் குறைப்பதற்கு 17 சந்தர்ப்பங்களில் தயாரிக்கப்பட்ட ரூபா 594,475 பெறுமதியான கிரய மதிப்பீடுகள் தொடர்புடைய தரப்பினருக்கு வழங்படாமல் 02 மாங்களிற்கு மேலாக உரிய கோவைகளில் இருந்தது என அவதானிக்கப்பட்டது. மேலும், நுவரெலியா உப அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் 02 சந்தர்ப்பங்களில் அவற்றின் மீதான கட்டணங்களை தனியார் தரப்பினரிடமிருந்து அறவிடப்படாமல் களப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும், உரிய தரப்பினருக்கு அத்தகைய அறிக்கைகள் வழங்கப்படாமல் நுவரெலிய உப அலுவலகத்தின் உரிய கோவைகளில் 15 சந்தர்ப்பங்களில் புவியியல் அறிக்கைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(iv) 16 பிரதேச செயலகங்களால் 2013இலிருந்து 2016 திசெம்பர் 31 வரை 293 சந்தர்ப்பங்களில் செய்யப்பட்ட வேண்டுகைகளில் 2017 சனவரி 18 வரையும் இரத்தினபுரி உப அலுவலகத்திற்கு இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் களப்பரிசோதகைள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நடாத்தப்படுகின்ற களப்பரிசோதனைகளில் இடர்கள் விளைந்த காலத்தின் போது செய்யப்பட்ட வேண்டுகைகளில் பதில் கூறுகின்ற தேவையின் அவசியம் காரணமாக ஏற்பட்டிருந்தது என பணிப்பாளர் நாயகம் விளக்கமளித்திருந்தார்.

### 4.1.2. மண்சரிவை குறைக்கும் நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மத்திய மாகாணத்தில் மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ள 10 அரசாங்க பாடசாலகள் மற்றும் 10 வைத்தியசாலைகளின் மண்சரிவு குறைக்கும் நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகள் ஊடாக ரூபா 200 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆராய்ச்சி நிறுவனம் மீளாய்வாண்டின் போது 12 மண்சரிவு குறைக்கும் செயற்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்ததுடன் அதில், ஒரு செயற்திட்டம் மாத்திரமே மத்திய மாகாணத்தில் இடம்பெற்றிருந்தது. அத்தகைய 08 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் அத்தகைய செயற்திட்டங்கள் தொடங்குவதிலுள்ள தாமதம் காரணமாக 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கபட்ட இலக்கினை விட 20 சதவீதத்தில் இருந்தது. அதில், வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட 06 செயற்திட்டங்களின் ஒப்பந்தப் பெறுமதி உரிய செயற்திட்டங்களின் பொறியியல் மதிப்பீடுகளிற்கு மேலாக 03 சதவீதம் முதல் 23 சதவீதம் அளவில் அதிகரித்திருந்தது.

(ஆ) சமுதாய அடிப்படை மண்சரிவு குறைப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுலாக்குவதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் 2015 இல் ரூபா 11,024,489 ஆன தொகை பெறப்பட்டிருந்ததுடன் அதில், மீளாய்வாண்டு இறுதியில் அவற்றில் ரூபா 6,000,000 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதில், சமுதாய அமைப்புகளின் உறுப்பினர்களிற்காக கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு ரூபா 18,645 மாத்திரமே செலவழக்கப்பட்டிருந்ததுடன் ஆராய்ச்சி நிறுவனங்களின் இலாபங்கள் மற்றும் மேந்தலைக் கிரயங்களாக ரூபா 5,981,355 ஆன தொகை மீதிகள் அறவிடப்பட்டிருந்தது.

(இ) ஆராய்ச்சி நிறுவனங்களால் அமுலாக்கப்பட்ட மண்சரிவு குறைப்பு செயற்திட்டங்களில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வரையறுத்த கேள்விகோரல் மூலம் சப்ரகமுவ மாகாண சபையில் சிவில் நிர்மாண நோக்கத்திற்காக பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து இந்த செயற்திட்டத்திடமிருந்து ஒப்பந்தகாரர் ஒருவரை தெரிவுசெய்வதற்கு தீர்மானித்தது. எவ்வாறாயினும் மேல் மாகாண சபையில் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரரரொருவர் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

(ii) 2015 ஆம் ஆண்டிற்கான அரசாங்க பாதீட்டு மதிப்பீட்டில் கீழ் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும், ஒப்பந்த வேலைகள் 2016 சனவரியில் தொடங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், உரிய பகுதி 2016 மே மாதத்தில் பாரிய மழை காரணமாக மண்சரிவுக்கு உட்படுத்தப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகளை ஒப்பந்தகாரர் நிறுத்தியிருந்தார். இது தொடர்பில் எழுந்த விடயங்களிற்கு தீர்வுகாண்பதற்கு 2017 மே 31 வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்ட ரூபா 971,200 தொகையான முற்பணங்களை அறவிடுவதற்கு தவறியிருந்தது. ஆராய்ச்சி நிறுவனம் உரிய காலத்தில் செயற்திட்ட நடவடிக்கைகளை தொடங்குவதன் மூலம் அத்தகைய ஆபத்தக்களை குறைப்பதற்கு கவனம் செலுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) 2016 முதல் 2020 வரையான காலத்தின் போது மண்சரிவு பகுதி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 10 மாவட்டங்களில் மண்சரிவு ஆபத்து பகுதிகளின் படம், தரவு அடிப்படை கணிப்பீடொன்றை உருவாக்குவதற்காக தகவல் சேகரித்தல், 1:5000 மட்டத்தில் நகரப் பகுதிக்கும் படம்வரைதல், கல்விசார் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் போன்ற நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு திட்டமிடப்பட்டது. ஆகவே, 02 மாவட்டங்களில் மீளாய்வாண்டின் போது அத்தகைய நடவடிக்கைகளை அமுலாக்குவதற்கு அரசாங்க பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 40,000,000 தொகையான ஒதுக்கீடுகள் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், பதுளை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் மாத்திரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு படவரைபுகள் தயாரித்தல் பூர்த்தியாக்கப்பட்டிருந்ததுடன் அவற்றில் ரூபா 30.15 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(உ) சமுதாய அடிப்படை முன்னைய எச்சரிக்கை முன்றைமையொன்று தயாரிப்பதற்கு மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சி தாபனத்தால் தொடங்கப்பட்டிருந்தது. அவற்றிற்கு அரசாங்கத்தின் வருடாந்த பாதீடட்டு மதிப்பீட்டில் ரூபா 44,000,000 தொகையான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மழைக் கவசங்கள் மற்றும் இந்த நோக்கத்திற்காக தானியங்கி மழைக் கவசங்கள் கொள்வனவு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் உபகரணங்கள் தன்னிச்சையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை என கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும், அத்தகைய உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 3,140,000 தொகை செலவழிக்கப்பட்டிருந்ததென குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத்தகைய உபகரணங்களின் சந்தைப் பெறுமதி ரூபா 487,037 ஆனதுடன் மேந்தலைக் கிரயமாக ஆராய்ச்சி நிறுவனத்தால் ரூபா 2,652,963 தொகையான மீதி சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஊ) பதுளை மாவட்டத்தில் ஹாலி -எல பிரதேச செயலக பிரிவில் கொட்டஹகரவின் மண்சரிவு குறைப்பு ஒப்பந்தம் 2015 ஒக்தோபர் 06 இல் தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 சனவரி 05 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் 2016 ஒக்தோபர் 05 இல் வளவு உடமையாக்கப்பட்டதுடன் மிகுதி வேலைகள் பூர்த்தியாக்குவதற்கு ஆராய்ச்சி நிறுவனத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

நிர்மாண வேலைகளிற்காக தரக்குறைவான இரும்புகள் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் ஆற்றுமணலிற்காக மாற்று ஏற்படாக கற்குவாரி கழிவுகள் பயன்படுத்தப்பட்டது என 2016 நவம்பர் 30 இல் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையில் வெளிப்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரர் உரிய பகுதியில் ஆற்றுமணல் குறைவு காரணமாக ஆற்றுமணலிற்குப் பதிலாக கற்குவாரி கழிவுகளை பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டது என பணிப்பாளர் நாயகம் தெரிவித்திருந்தார்.

(எ) 2015 செப்தெம்பர் 17 இல் தொடங்கப்பட்டிருந்த மாத்தளை மாவட்டத்தில் புசல்ல நவோத வித்தியாலயத்தில் மண்சரிவு குறைப்பு வேலைகள் 2016 மார்ச் 04 இல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேலும், வெவகம வைத்தியசாலை வளவில் அமுலாக்கப்பட்ட மண்சரிவு குறைப்பு செயற்திட்டத்தின் கீழான நடவடிக்கைகளும் ஒப்பந்தகாரரால் 2016 ஏப்ரல் 08 இல் நிறுத்தப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், செயலாற்றல் பிணைமுறிகளை காசாக்குவதற்கும் அவற்றின் முற்பணங்களை அறிவிடுவதற்கும் ஆராய்ச்சி நிறுவனத்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், மேற்குறிப்பிட்ட செயற்திட்டங்களிற்காக தெரிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் உரிய வேலைகளிற்கான தரமுடைய ஒப்பந்தகாரர் ஒருவாக இருக்கவில்லை. என கணக்காய்வில் வெளிப்பட்டது.

## 4.2. ஒப்பந்த நிர்வாகம்

ஆராய்ச்சி நிறுவனத்திற்காக கொழும்பு 07 பிரதேசத்தில் நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கப்பட்ட கட்டிடத்திற்காக அரசாங்க கொள்வனவு கைநூலின் 4.3.1 ஆம் பந்தியின் பிரகாரம் விரிவான கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்காத போதிலும், அற்றின் நிர்மாண வேலைகளை மேற்கொள்வதற்கு 2015 மற்றும் 2016 இல் பொது திறைசேரியால் ரூபா 200,000,000 ஆன தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மேற்குறிப்பிடப்பட்ட ஒதுக்கீட்டில், ரூபா 76,630,000 ஆன தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மொத்தச் செலவினத்தில் 27 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 20,505,675 ஆன தொகை அவற்றினுடைய மேந்தலைச் செலவினங்களாக ஆராய்ச்சி நிறுவனத்தால் சாட்டுதல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மண் நிரப்புதல் வேலைகளிற்கான ஒப்பந்தம் ரூபா 45,295,494 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் தனயார் கம்பனியொன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 29 இல் ரூபா 9,125,808 தொகையான தொழிலாரம்பிப்பு முற்பணங்கள் விடுவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 03 மாதங்கள் கடந்த பின்னர் 2016 மார்ச் 28 இலே நிர்மாண வேலைகள் தொடங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தம் வழங்கிய பின்னர் கட்டிட வரைபடம் திருத்தப்பட்டிருந்ததுடன் இதன் விளைவால், நிரப்புதல் வேலைகளின் கிரயம் ஆரம்ப மதிப்பீட்டில் 46 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 66,361,737 வரை அதிகரித்திருந்தது.

## 4.3. மனிதவள முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி நிறுவனமானது நிபுணத்துவ அறிவுடைய உத்தியோகத்தர்கள் குறைவு காரணமாக அலுவலக நேரங்களிற்கு மேலாக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருந்ததுடன் அவற்றின் மீது பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பந்தியின் பந்தியின் பிரகாரம், மேலதிக நேர கொடுப்பனவிற்கு தகுதியற்ற உத்தியோகத்தர்களிற்கு மேலதிக நேர கொடுப்பனவாக 2016 இல் ரூபா 6,869,691 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) 2013 ஒக்தோபர் 13 ஆந் திகதிய 21/2013 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையில் செய்யப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம், பொது விடுமுறை அல்லது வார இறுதி நாட்களில் மாதத்தில் ஒரு நாட்களிற்கு மேல் சேவையாற்ற உத்தியோகத்தர்களை ஈடுபடுத்துவதற்கு அமைச்சு செயலாளரின் அனுமதி பெறப்பட்டிருக்க வேண்டும். எவ்வாறாயினும், ஆராய்ச்சி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் அத்தகைய அனுமதி பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டு முழுவதும் பொது விடுமுறை மற்றும் வார இறுதிய நாட்களில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். ரூபா 1,546,020 கூட்டுத் தொகையான படிகள் மற்றும் ரூபா 213,093 கூட்டு மெத்த தொகையான ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கான பங்களிப்பு செலுத்தப்பட்டது. எவ்வாறாயினும், உரிய நபர்களில் அத்தகைய விசேட கடமைகளிற்கான வருகையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்விற்கு சான்றுகள் எதுவும் இருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி நிறுவனமானது செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு ஆலோசனை சேவைகளை வழங்குவதற்கு 2015 இல் காலநிலை மாற்ற முன்னேற்ற செயற்திட்டதுடன் உடன்படிக்கையொன்று கைசாத்திட்டிருந்தது. எவ்வாறாயினும், ஆராய்ச்சி நிறுவனத்தில் கடமைகளிற்கு மேலதிகமாக செயற்திட்ட கடமைகளிற்காக ஈடுபடுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள் 33 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 1.1 ஆம் பந்தியில் வேண்டப்பட்டவாறு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், 09 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு 07 தொழில்நுட்ப தரமல்லாத உத்தியோகத்தர்களிற்காக படிகளை செலுத்துவதற்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் இடைக்கால 10 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு 16 தொழில்நுட்ப தரமல்லாத உத்தியோகத்தர்களிற்காக படிகள் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், செயற்தட்ட நடவடிக்கைகளிற்காக முழு நேர அடிப்படையில் ஆராய்ச்சி நிறுவனத்தால் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கையின் 4.1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு 50 சதவீத தகுதிபெற்ற படிகளை விஞ்சி மீளாய்வாண்டின் போது ரூபா 333,678 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது அதேநேரம் செல்லப்பட் சுற்றறிக்கையின் 4.1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட மாதாந்த சம்பளத்தின் 1/3 ஆன தகுதியுடைய படியினை விஞ்சி ரூபா 121,949 ஆன தொகை செயற்திட்ட நடவடிக்கைகளிற்காக பகுதிநேர அடிப்படையில் விடுவிக்கப்பட்ட வேறு 02 உத்தியோகத்திற்களிற்கு செலுத்தப்ப்டிருந்தது.

(இ) ஆராய்ச்சி நிறுவனத்தின் நிர்வாக மற்றும் நிதிப் பிரிவுகளிற்கான பணப்பாளர்களை சேர்ப்பதற்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி 2016 ஆகஸ்ட் 18 இல் பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2017 மே 31 வரை வரையும் அந்த உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. ஆராய்ச்சி நிறுவனத்தின் உரிய பிரிவுகள் பல ஆண்டுகளாக பதில் கடமை அடிப்படையில் நியமிக்கப்பட்ட பணப்பாளர் ஒருவரின் கீழ் செயற்படுகின்றது.

(ஈ) ஆராய்ச்சி நிறுவனத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் 104 விஞ்ஞானிகளை கொண்டுள்ள போதிலும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 77 விஞ்ஞானிகள் மாத்திரமே சேவையில் உள்ளனர் எவ்வாறாயினும், ஒப்படை அடிப்படையில் 38 விஞ்ஞானிகள் மற்றும் 35 பயிற்சியாளர்களை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

## 5. கணக்களிதன்மையும் நல்லாளுகையும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

ஆராய்ச்சி நிறுவனத்தின் செயல்நடவடிக்கை திட்டத்தில் நிதி இலக்குகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அடைய வேண்டுமென எதிர்பார்க்கபபட்ட பௌதீக இலக்குகள் அவற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே, இடர் ஆபத்து வலயங்களின் படம் வரைதல் மற்றும் மண்சரிவு ஆபத்து இடர்களை குறைப்பதற்கான நிர்மாண வேலைகள் என்பன தொடர்பில் பௌதீக செயலாற்றல் கணக்காய்வில் மதிப்பாய்வு செய்ய முடியாதிருந்தது.

### 5.2 உள்ளகக் கணக்காய்வு

ஆராயச்சி நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவு ஒரு உத்தியோகத்தரை கொண்டுள்ளதுடன் இது மாவட்டம் வாரியாக அமைந்துள்ள உப அலுவலகங்களால் ஆராய்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் கணக்காய்வினை அமுலப்படுத்துவதற்கு போதாதிருந்தது என அவதானிக்கப்பட்டது.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதி இலக்குகளை நிர்ணயித்தல் மற்றும் அவற்றின் இலக்குகளை அடைதல் என்பவற்றில் போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. பாதீடானது 2016 யூலை வரை உள்ளபடியான செலவினம் மற்றும் உருவாக்கப்பட்ட வருமான என்பவற்றின் அடிப்படையில் 2016 செப்தெம்பரில் திருத்தப்பட்டிருந்தது, ஆதலால், பாதீடானது சிறந்த முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள நலிவுகள் காலத்திற்கு காலம் ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் | அவதானிப்பு |
|---|---|---|
| (அ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | நீண்ட காலம் நிலுவையாகவிருக்கின்ற மீதிகளை அறவிடுவதில் பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | மனித வள முகாமைத்துவம் | பிரதான முகாமைத்துவ பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்படவில்லை |
| (இ) | செயற்திட்ட முகாமைத்துவம் | மதிப்பீடுகள் தயாரித்தல் மற்றும் தாமதம் இல்லாமல் ஒப்பந்தம் வழங்கல் என்பன இன்மை |
| (ஈ) | பொருளிருப்பு கட்டுப்பாடு | பொருளிப்புப் பதிவேடுகள் முறையாகப் பேணப்படாமை. |